**<u>கம்பம் நகராட்சி</u>**

**2019—ஆம் ஆண்டு ஜுன் மாதம் (13.06.2019) ஆம் நாள் வியாழன் கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

**<u>கூட்டப் பொருட்கள்</u>**

**1.** சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 26888/UGSS-2/2018—32 நாள். 29.01.2019 ன் படி, இந்நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் (IUDM) திட்டம் 2018—19 —இன் கீழ் திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்தப்படும் இடத்தில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள் செய்திட **ரூ.410.00** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| **சிப்பம் எண்** | **பணிகளின் விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| I | கம்பம் நகராட்சிக்கு சொந்தமான கம்பம்—குமுளி சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்தப்படும் இடத்தில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைத்தல் | 410.00 |

மேற்கண்ட பணிக்கு நகர்மன்றத்தீர்மானம் எண். 1666, நாள்.31.12.2018 ன்படி, மன்ற அனுமதியும், சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் தலைமைப் பொறியாளரின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 26888/2018/டிஒ2, நாள். 28.02.2018 ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், மேற்கண்ட பணிகளுக்கு 25.04.2018 ம் தேதி ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி, மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Off line) கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 2019 பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் இருந்து தளர்வு செய்யப்பட்ட பின் 28.05.2019 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் 28.05.2019 அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (TechnicalBid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| **1** | திருவாளர்கள் ஏ.பி கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், **31, 33/16**, ஏ.எம் சர்ச் தெரு, கம்பம் |
| **2** | திரு. ஆர். சபீர்அலி, அரசு ஒப்பந்ததாரர், **9/16**, ஏ.எம். சர்ச் தெரு, கம்பம். |

தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 03.06.2019 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள் ஏ.பி கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், **31, 33/16**, ஏ.எம் சர்ச் தெரு, கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.97 % அதிகம் |
| 2 | திரு. ஆர். சபீர்அலி,<br>அரசு ஒப்பந்ததாரர்,<br>**9/16**, ஏ.எம். சர்ச் தெரு, கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 9.78 % அதிகம் |

| | |
|---|---|
| | மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.97% சதவிகிதம் கூடுதலாக வழங்கிய திருவாளர்கள் ஏ.பி. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், 31, 33/16 ஏ.எம். சர்ச் தெரு, கம்பம் 625 516 ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 4.97% சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 06.06.2019ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு**:— வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. இதில் 4.99% சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கியுள்ள திருவாளர்கள் ஏ.பி. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், 31, 33/16 ஏ.எம். சர்ச் தெரு, கம்பம் 625 516ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் பரிசீலினைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1699/2018/இ1) |
| **2.** | இந்நகராட்சிக்குட்பட்ட கம்பராயபெருமாள் கோவில் கிழக்கு வாசல் , ராமயன் தெரு, குரங்குமாயன் தெரு, காளவாசல் ரோடு, செக்கடி தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சிறுபாலங்கள் பழுதடைந்த நிலையில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட பகுதிகளில் சிறுபாலங்கள் அமைத்திட ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. **5.00** இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| **3.** | இந்நகராட்சியில் நீண்ட காலமாக நிலவி வந்த குடிநீர் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு, நகராட்சிக்கென தனியாக சுருளிப்பட்டி ரோடு முல்லை பெரியாற்றில் கூடுதல் குடிநீர் திட்டம் **ரூ.2.25 கோடி** மதிப்பீட்டில் உறைகிணறு அமைத்து, 7 மின் மோட்டார்கள் மொத்தம் 160 குதிரை திறனுடன் நிறுவி, திட்டப்பணி முடித்து 23.09.2014 முதல் கம்பம் நகர மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி குடிநீர் நீரேற்று நிலையத்தில் உள்ள சுலீஸ் வால்வுகள், என்.ஆர்.வி.வால்வுகள் பழுதால் பம்பிங் செய்யப்படும் குடிநீர் மறுபடியும் நீர் சேகரம் ஆகும் கிணற்றுக்குள் புகுவதால் நகரில் உள்ள மேல் நிலைத்தொட்டிகளுக்கு குடிநீர் வந்து சேரும் நீரின் அளவு மிக குறைவு ஆவதால் நகரில் குடிநீர் விநியோகம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும் பம்பிங் ஸ்டேஷன் மின் சப்ளையிலும் மின்னழுத்த வேறுபாடுகள், இருமுனை மும்முனை மின்சாரம் மாறி மாறி சப்ளை ஆவதால் தொடர்ந்து மின் மோட்டார்களை இயக்க முடியாத நிலையும், மின் உபகரணங்கள் பழுதடைந்தும் உள்ளது. தற்போது கம்பம் நகரிலிருந்து 24 மணி நேர மும்முனை மின் இணைப்பு விரைவில் கிடைக்க பணிகள் நடைபெற்று வருவதால் பம்பிங் ஸ்டேஷன் மின் மோட்டார்களை 24 மணிநேர தொடர் இயக்க நிலைக்கு பராமரிக்க தேவையான பணிகள் செய்ய தயார் செய்த மதிப்பீடு (ஜி.எஸ்.டி உட்பட) ரூ.4.30,000/—க்கு ( ரூபாய் நான்கு இலட்சத்தி முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு..<br>1) மேற்படி பணிகளை, பொதுமக்களின் அத்தியாவசிய குடிநீர் தேவையை கருத்திற்கொண்டும் ஆற்றில் நீர் வரத்து குறைவாக உள்ள சமயத்தில் மட்டுமே பணிகள் செய்ய இயலும் என்பதாலும், பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்,<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை 2019 – 2020 ஆம் ஆண்டு குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| **4.** | இந்நகராட்சி சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படும் கேஸ் குளோரினேசன் சிலிண்டர், 01.07.2019 முதல் 31.03.2020 முடிய உள்ள காலத்திற்கு 10 சிலிண்டர்கள் வாங்கி பயன்படுத்த ஆகும் செலவினம் **ரூ.2,55,000/–**க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். |
| **5.** | இந்நகராட்சியில் புதியதாக வாங்கப்பட்ட பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனத்தை சார்ஜ் போடுவதற்கு வசதியாக, அலுவலக வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் மின் இணைப்புடன் பவர் பிளக்பாயின்டுகள் அமைக்கவும், பேருந்து நிலையத்தில் மின் கட்டுப்பாட்டு அறையில் உள்ள மின் இணைப்புகள் அனைத்தும் சேதமாகி உள்ளதை மின்பராமரிப்பு செய்யவும், மற்றும் புதியதாக எல்,இ,டி,விளக்குகள் அமைக்கவும், குமுளி ரோடு உரக்கிடங்கில் இயந்திரங்கள் நிறுவப்பட்ட இடத்தில் பாதுகாப்பு கருதி கூடுதலாக மின்விளக்குகள் பொருத்தவும் , அலுவலக மின்னாக்கி பராமரிப்பு போன்ற மின் பணிகள் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு (ஜி.எஸ்.டி. உட்பட) **ரூ,4,88,000/–க்கு (ரூபாய் நான்கு இலட்சத்தி எண்பத்தி எட்டாயிரம் மட்டும்)** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு..**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை 2019 – 2020 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **6.** | இந்நகராட்சியில் உள்ள 2340 தெருவிளக்குகளை 2019 –2020 ம் ஆண்டிற்கு (முதல் அரையாண்டிற்கு) பராமரிக்க தேவையான மின் பொருட்கள் வாங்க ஆகும் மதிப்பீட்டுத் தொகை **ரூ.490000/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை 2019–2020 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **7.** | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 60 T 4507 வாகனத்திற்கு 30.06.2019 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ. 1,55,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2)அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று தகுதிச்சான்று பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். |
| **8.** | மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளதன்படி, கம்பம் நகராட்சியில் தயார் செய்யப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை கொள்கையினை ( Solid Waste Management Policy) மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், அதற்காகும் செலவினத் தொகை ஒரு பக்கத்திற்கு ரூ. 2,100/– வீதம் மொத்தம் 9 பக்கத்திற்கு ரூ. 18,900/– ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன் அனமதி பெற்று, மேற்காணும் திடக்கழிவு மேலாண்மை கொள்கையினை ( Solid Waste Management Policy) மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும் அதற்காகும் தொகையினை மன்றம் அனுமதிக்கலாம். |

ஒப்பம்/– திருமதி. இ. செல்வராணி,
நாள். 13.06. 2019 ஆணையாளர்(பொ) மற்றும் தனி.அதிகாரி,
இடம். கம்பம் கம்பம் நகராட்சி.